# கடும் அழுத்தங்களுக்கு மத்தியிலும் மாவீரர்களை வடக்கு, கிழக்கில் மக்கள் நினைவுகூருகின்றனர்

## உணர்வு பூர்வமாக சுடரேற்றி அஞ்சலி நிகழ்வுகள்





**மாவீரர் நாளான இன்று அவர்கள் நினைவாக அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் வடக்கு, கிழக்கில் பல இடங்களில் நடைபெற்றுள்ளன.**

**இதேவேளை, இன்று காலை முதலே பல நினைவிடங்களில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தல் நடைபெற்றுள்ளது.**

**கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம் முன்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தலைமையிலான குழுவினர் சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.**

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 11 திங்கட்கிழமை 27.11.2023 கதிர் 121




## மாவீரர் தின நிகழ்வுகளுக்குத் தடை கோரிய மனு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தால் நிராகரிப்பு

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் மாவீரர் தின நிகழ்வுகளை தடை செய்ய உத்தரவிடக் கோரி பொலிசார் தாக்கல் செய்த மனு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய்ப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் மாவீரர் தின நிகழ்வுகளை தடை செய்ய உத்தரவிட கோரி யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளினால் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கோப்பாய் துயிலுமில்லம், நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட நினைவு மண்டபம் என்பவற்றில் மாவீரர் நாள் நினைவேந்தல் நடைபெறவுள்ள நிலையில் அதற்குத் தடை கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. குறித்த மனு மீதான விசாரணை இன்று திங்கட்கிழமை (27) யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போது, மாவீரர் தினத்திற்கு தடை கோரிய பொலிஸாரின் மனுவை யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா நிராகரித்தார். “இறந்தவர்களை நினைவுகூருவதைத் தடை செய்ய முடியாது. ஆனால், தடை செய்யப்பட்ட அமைப்பு மற்றும் - அவர்களை அடையாளப்படுத்தும் கொடி உள்ளிட்ட எதையும் பயன்படுத்த முடியாது” என அவர் தனது உத்தரவில் தெரிவித்தார்.

## அலம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் கொடிகளை கிழித்தெறிந்த பொலிசார்



மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் தொடங்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக முல்லைத்தீவு அலம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் கட்டப்பட்டிருந்த மஞ்சள், சிவப்பு வர்ணக்கொடிகளை பொலிசார் கிழித்தெறிந்துள்ளனர். கொடியேற்றலாம், பதாகைகளையும் கார்த்திகை மலரையும் பயன்படுத் தலாம் அத்துடன் துயிலும் என்ற சொல்லை எந்தக் காட்சிகளிலும் பயன்படுத்தலாம் என முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் இன்று காலை வழங்கிய உத்தரவை பொலிஸார் புறக்கணித்துள்ளனர் என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## யாழ்ப்பாணப் பல்கலையில் மாவீரர் நினைவு வளைவு




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாள் நினைவேந்தலை முன்னிட்டு தற்காலிகமான நினைவு வளைவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாவீரர் வாரம் கடந்த செவ்வாய்கிழமை (21) ஆரம்பமாகிய நிலையில், ஒவ்வொரு நாளும் பல்கலைக்கழகத்தில் நினைவேந்தல் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (01)

## ரொஷான் ரணசிங்கவின் அமைச்சுப் பதவி பறிப்பு!



விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரண-சிங்கவை உடன் அமுலுக்கு வரும் வகையில் அமைச்-சர் பதவி மற்றும் ஏனைய பதவிகளில் இருந்து நீக்கி ஜனாதிபதி கடிதம் அனுப்பியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி செயலகத்திற்கு சென்றிருந்தபோதே விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கும் கடிதம் அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைக்கப்பட்ட நிலையில், அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## ஊர்காவற்றுறை நீதிமன்றும் தடை கோரலை நிராகரித்தது

மாவீரர் நாள் நினைவேந்தலைத் தடைசெய்யும் பொலிசாரின் இறுதிக்கட்ட முயற்சியொன்று ஊர்காவற்றுறை நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நினைவேந்தலைத் தடை செய்யவும், சிவப்பு மஞ்சள் நிறக் கொடிகளைப் பயன்படுத்தக்கூடாது என்று உத்தரவிடவும் கோரி பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

## எச்ஐவி பாதிப்புக்கு உள்ளாகியோரை ஒதுக்காதீர்கள் அவ்வாறு செய்தல் அதை மேலும் பரவ வழி சமைக்கும்

### உலக எய்ட்ஸ் தினத்துக்கான ஊடகர் சந்திப்பில் தெரிவிப்பு

“எச்.ஐ.வி பாதிக்கப்பட்டவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்காதீர்கள். அவ்வாறு ஒதுக்கப்பட்டால், அவர்கள் சிகிச்சை பெற முன்வர மாட்டார்கள். இத்தகைய நிலையில் அவர்கள் மூலம் இன்னும் சிலருக்கு எச்.ஐ.வி. தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது” என தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வேலைத் திட்டத்தின் பணிப்பாளரான மருத்துவ நிபுணர் ஜானகி விதானபத்திரன தெரிவித்தார்.

டிசம்பர் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “எச்ஐவி பாதிக்கப்பட்டவர்கள் ஓரங்கட்டப்பட்டால், அவர்கள் சிகிச்சைப் பெற முன்வர மாட்டார்கள். இவ்வாறு அவர்களுக்கான சிகிச்சை தாமதப்படுவதன் மூலம் எச்.ஐ.வி தாக்கம் மேலும் அதிகரிக்கலாம். மறுபுறம்

2 ➤

# 1985 ஆம் ஆண்டுக்கு முன் மக்கள் வாழ்ந்த இடங்களை அவர்களுக்கே வழங்க ஏற்பாடு

## அமைச்சர் பவித்ராதேவி மன்றில் தகவல்

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட 11 மாவட்டங்களில் 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் மக்கள் வாழ்ந்ததாக அடையாளப்படுத்தப்படும் அனைத்து இடங்களையும் அவர்களுக்கே மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மக்களின் காணி விவகாரம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

“எங்களுடைய வரைபடத்தில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட 11 மாவட்டங்களில் 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் மக்கள் வாழ்ந்த காணிகள் இருந்தால் அதனை அடையாளப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஜனாதிபதியின் ஆலோசனையின்படி நான் சமர்ப்பித்துள்ள அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைய அந்த படங்களை மக்களுக்கே மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அதற்கமைய, எனது அமைச்சின் செயலாளர் மற்றும்



வனஜீவசாரிகள் திணைக்களத்தின் செயலாளர் நாயகம் ஆகியோர் அந்தந்த மாவட்டங்களுக்கு விஜயம் செய்துள்ளனர். இவர்கள் 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் மக்கள் வாழ்ந்த இடங்கள் எவை என்பது குறித்து முழுமையான தகவல்களை பெற்றுக்கொண்டுள்ளனர். அந்த தகவல்களுக்கு அமைய இறுதி அறிக்கையும் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை ஜனாதிபதி செயலாளரின் தலைமையிலான குழுவிடம் சமர்ப்பித்து, அதனூடாக காணி ஆணையாளரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். பின்னர் அந்தக் காணிகளை பிரதேச செயலாளரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

இதனைத் தொடர்ந்து உரிய காணியை, காணி உறுதி பத்திரத்துடன் மக்களிடம் வழங்குவோம்” என அவர் மேலும் தெரிவித்தார்.

### எச்ஜவி பாதிப்புக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மூலம் இன்னும் சிலருக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்படவும் கூடும். எனவே, எச்.ஐ.வி. இருப்பதாக சந்தேகம் இருந்தால், எச்ஜவி கிளினிக்களுக்கு வருகை தாருங்கள். இதற்கென மருத்துவமனைகளுடன் இணைந்த 41 கிளினிக்குகள் உள்ளன.

எச்ஜவி உள்ளவர்கள் சமூகத்தில் ஒதுக்கப்படுவதை காண்கின்றோம். அவ்வாறு செய்தல் ஆகாது, சமூகத்தில் ஆரோக்கியமாக உள்ளவர்களாகட்டும் மற்றும் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களாகட்டும் அனைவரும் இந்த உலகில் வாழ்வதற்கான உரிமை உள்ளவர்களாவர்” என்றார். (ரெந-47)

### கடும் அழுத்தங்களுக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோப்பாய் துயிலும் இல்லம் இராணுவத்தினரால் இடித்து அழிக்கப்பட்டு, தற்போது இராணுவத்தினரின் 51ஆவது படைப்பிரிவின் தலைமையகம் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் – கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவத்தின் 522 ஆவது பிரிகேட் முகாம் முன்பாகவும், முதலாவது கரும்புலி மாவீரர் மில்லரின் நினைவாக நெல்லியடி மத்திய கல்லூரியின் முன்பாகவும், அகிம்சை வழியில் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாகதீபம் திலீபனுக்கு யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள அவரது நினைவிடத்திலும் ஈகைச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரர் சங்கர் என அழைக்கப்படும் சத்தியநாதனுக்கு ஈகைச்சுடரேற்றி இன்று அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறையிலுள்ள அவரது இல்லத்திற்கு முன்பாக ஈகை சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது மாவீரர் பண்டிதரின் தாயார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் க.சதீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தினர்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரை போராட்டக்களத்தில் தியாகம் செய்தவர்கள் நினைவாக, கார்த்திகை 27 ஆம் திகதி, மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் இவ்வருடமும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை மக்கள் உணர்வு பூர்வமாக முன்னெடுத்துவருகின்றனர். (01, 04)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் தடை கோரிய வழக்குகள் நீதி மன்றங்களால் நிராகரிப்பு

மாவீரர் நாள் நினைவேந்தலை தடை செய்யக் கோரி யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு பொலிஸ் நிலையங்களாலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இன்றையதினம் நீதிமன்றங்களால் நிராகரிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை பருத்தித்துறை,நெல்லியடி பொலிஸார் மாவீரர் தினத்திற்கு தடை கோரி தாக்கல் செய்த மனு பருத்தித்துறை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

ஊர்காவற்துறை நீதிமன்றில் மாவீரர் தினத்திற்கு எதிரான ஊர்காவற்துறை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு அஞ்சலி செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்படடது.

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் மாவீரர் தின நிகழ்வுகளை தடை செய்ய உத்தரவிட கோரி பொலிசார் தாக்கல் செய்த மனு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

எழுச்சியாக இம்முறை மாவீரர் நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்கு துயிலுமில்லங்கள் தயாரான நிலையில் இறுதி நேரத்தில் தடை விதிக்க பொலிஸார் நீதிமன்றத்தை நாடியபோதும் நீதிமன்றங்களால் குறித்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

அதேவேளை கடந்த வாரம் மானிப்பாய், பலாலி, அச்சுவேலி, தெல்லிப்பழை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மல்லாகம் நீதவான் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சாட்டி துயிலுமில்லம், கொடிகாமம் துயிலுமில்லம், எள்ளாங்குளம் துயிலுமில்லம், கோப்பாய் துயிலுமில்லம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன்பாக உள்ள மாவீரர் மண்டபம் என பல இடங்களிலும் மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு ஏற்பாடாகியுள்ளது.

மாவீரர் துயிலும் இல்லங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வுகளில் சரியாக மாலை 6.02 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டு மாலை 6.05 மணிக்கு ஈகச் சுடரேற்றல் இடம்பெறும். இதன்போது மாவீரர் நாள் பாடல்களும் ஒலிக்கவிடப்படும் என்று மாவீரர் தின ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் புலம்பெயர் தேசங்களிலும் இன்று மாவீரர் தின நிகழ்வுகளைப் பேரெழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (01)




விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி – மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விற்பனையும் கண்காட்சியும்





(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்துடன் இணைந்து சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு ஏற்பாடு செய்த உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான விற்பனை மற்றும் கண்காட்சி நிகழ்வானது இன்று திங்கட்கிழமை பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நடைபெற்றது.

இது சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த விற்பனை மற்றும் கண்காட்சி நிகழ்வின்போது பிரதேச செயலகப் பிரிவின் உள்ளூர் உற்பத்தியாளர்களால் செய்யப்பட்ட பொருட்கள் (தைத்த ஆடைகள், உள்ளூர் மரக்கறிகள், உணவு வகைகள், மரக்கன்றுகள், பாதணிகள், கைப்பணிப் பொருட்கள், மரத்தினாலான கைவினைப் பொருட்கள், பனையோலைப் பொருட்கள், கைத்தறி) காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், கணக்காளர் ரி. விக்னராஜா, நிருவாக உத்தியோகத்தர் வே.தவேந்திரன், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பொருட்களைக் கொள்வனவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அக்கரைப்பற்றில் தொற்றா நோய்த் தடுப்பு விழிப்புணர்வு சைக்கிளோட்ட நிகழ்வு




(சியாத்.எம்.இஸ்மாயில் )

உலக நீரிழிவு தினத்தினை முன்னிட்டு அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலை நலன்புரிச்சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொற்றா நோய் தடுப்பு விழிப்புணர்வு சைக்கிளோட்ட நிகழ்வு அக்கரைப்பற்றில் நேற்று நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் டொ டாக்டர். ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் வழிகாட்டுதலில் நலன்புரி சங்கத்தின் தலைவர் டொக்டர். ஏ.ஜி.எம்.ஷயீ தலைமையில், அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலை முன்றலில் இருந்து ஆரம்பமான இந்த விழிப்புணர்வு சைக்கிளோட்டம் அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதி வழியாக ஒலுவில் தென்கிழக்கு பல்லைக்கழகத்தை சென்றடைந்து மீண்டும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையை வந்தடைந்தது.

இவ்விழிப்புணர்வு நிகழ்வில் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



## ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயம் திறன் வகுப்பறை அங்குரார்ப்பண நிகழ்வு

(ஹஸ்பர்)

வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரனையில் திருகோணமலை மாவட்டம் கிண்ணியா கல்வி வலயத்திற்குட்பட்ட ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்திற்கு திறன் வகுப்பறை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று (26) நடைபெற்றது

வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் நாடாளவிய ரீதியில் முன்னெடுத்துவரும் கிராமப்புற பாடசாலைகள் மற்றும் பயிற்சி நிலையங்களுக்கு திறன் வகுப்பறைகள் வழங்கும் விசேட செயற்திட்டத்தின் கீழ், திருகோணமலை மாவட்டம் கிண்ணியா கல்வி வலயத்திற்குட்பட்ட ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்திற்கு அவுஸ்திரேலியா நாட்டில் வசிக்கின்ற தாமோ புஷ்பம் கங்காதரன் அவர்களின் நிதி

அனுசரணையில் வன்னிஹோப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தத் திறன் வகுப்பறை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எம்.ரீ.எம் பாரிஸ், வன்னி ஹோப் நிறுவன உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# 17 கைதிகளை விடுவித்தது ஹமாஸ் இஸ்ரேல் 39 பேரை விடுதலை செய்தது

இஸ்ரேலுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், மேலும் 13 இஸ்ரேலியர்கள், 4 வெளிநாட்டினர் என 17 பேரை ஹமாஸ் அமைப்பினர் சனிக்கிழமை இரவு விடுவித்தனர்.

அதற்குப் பதில் நடவடிக்கையாக கிழக்கு ஜெருசலேம், மேற்குக் கரையில் பாலஸ்தீன சிறைக் கைதிகள் 39 பேரை இஸ்ரேல் விடுவித்தது.

இஸ்ரேல் ராணுவம் - ஹமாஸ் ஆயுதக் குழு இரண்டுக்கும் இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கும், ஹமாஸ் பிடித்து வைத்துள்ள பிணைக் கைதிகளை விடுவிக்கவும் சர்வதேச நாடுகளின் உதவியுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. இதில், 5 பிணைக் கைதிகள் மட்டும் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், கட்டார் தலைமையில் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டு, இரு தரப்பிலும் கடந்த 22 ஆம் திகதி உடன்பாடு ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தில், 4 நாள்களுக்கு மோதல் நிறுத்தம் மேற்கொள்ள இஸ்ரேலும், ஹமாஸ் அமைப்பும் ஒப்புக்கொண்டன.

இந்த மோதல் நிறுத்தத்தின்போது 50 இஸ்ரேல் பிணைக் கைதிகளை ஹமாஸூம், 150 பாலஸ்தீன சிறைக் கைதிகளை இஸ்ரேலும் விடுவிப்பதாக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி, போரால் பாதிக்கப்பட்ட காஸா பகுதியில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தின்படி, 25 பிணைக் கைதிகளை ஹமாஸூம், 39 பாலஸ்தீன சிறைக் கைதிகளை இஸ்ரேலும் கடந்த வெள்ளிக்கிழமை விடுவித்தன. 2 ஆவது கட்டமாக சனிக்கிழமை பிணைக் கைதிகள் மேலும் சிலர் விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், போர் நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்களை இஸ்ரேல் ராணுவம் மீறுவதாகக் கூறி, பிணைக் கைதிகளை விடுவிப்பதை ஹமாஸ் தாமதப்படுத்தியது.

பின்னர், சனிக்கிழமை இரவு தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த 4 பேர், இஸ்ரேலியர்கள் 13 பேர் என 17 பேரை ஹமாஸ் விடுவித்தது.

இவர்கள் 17 பேரும் இஸ்ரேலுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு, உடல்நிலைப் பரிசோதனைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும், பரிசோதனை முடிந்து குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படுவார்கள் எனவும் இஸ்ரேல் ராணுவம் தெரிவித்தது.

இதேவேளை, சனிக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் 39 பாலஸ்தீன சிறைக் கைதிகளை இஸ்ரேல் ராணுவம் விடுவித்தது. இவர்கள் கிழக்கு ஜெருசலேம் மற்றும் மேற்குக் கரையில் உள்ள அவரவர் வீடுகளுக்குத் திரும்பினர்.

ஜெருசலேமில் உள்ள தனது வீட்டுக்குத் திரும்பிய பாலஸ்தீன பெண் சௌரஹ் துவியத், செய்தியாளர்களிடம் கூறுகையில், காஸாவில் உள்ள எங்கள் மக்களுடன் நாங்கள் துணை நிற்போம் என்றார்.

முன்னதாக, கிழக்கு ஜெருசலேமிலும், மேற்குக் கரையில் உள்ள பெய்துனியா நகரிலும் சிறைக் கைதிகளின் வருகைக்காக நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்கள் காத்திருந்தனர்.

ஹமாஸ் தரப்பில் விடுவிக்கப்பட்ட பிணைக் கைதிகளில் பெரும்பாலானவர்கள் இஸ்ரேலின் ஹிப்புட்ஸ் நகரைச் சேர்ந்தவர்கள். பிணைக் கைதிகளை அவர்களின் உறவினர்கள் உணர்ச்சிப் பெருக்குடன் வரவேற்றனர்.

மேலும் 10 பிணைக் கைதிகளை விடுவிக்கும் வகையில் 4 நாள் போர் நிறுத்தம் மேலும் ஒரு நாள் நீட்டிக்கப்படலாம் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (04)

# மொஸ்கோ மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல் முறியடித்துவிட்டதாக ரஷ்யா அறிவித்தது!



மொஸ்கோவை குறிவைத்து உக்ரைன் நடத்த முயன்ற ட்ரோன் தாக்குதல்களை முறியடித்துவிட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

மொஸ்கோ பிராந்தியத்தில் 24 ட்ரோன்களை ரஷ்ய வான் பாதுகாப்பு அமைப்பு சுட்டு வீழ்த்தியதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தனது டெலிகிராம் பதிவுகளில் தெரிவித்தது.

மொஸ்கோ பிராந்திய ஆளுநர் அண்ட்ரே வோரோபியேவ் வெளியிட்ட பதிவில், உக்ரைன் ட்ரோன் தாக்குதல்களால் மூன்று கட்டடங்கள் சேதமடைந்ததாகவும், இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மொஸ்கோவிலிருந்து 180 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள டுலா நகரில் 12 மாடிக் குடியிருப்பில் ஒரு ட்ரோன் தாக்கியதாகவும், இதில் சிலர் காயமடைந்ததாகவும் ரஷ்ய டெலிகிராம் சேனல்கள் தெரிவித்துள்ளன.

ட்ரோன் தாக்குதல் அபாயம் கருதி மொஸ்கோவில் உள்ள இரு விமான நிலையங்கள் சிறிது நேரத்துக்கு மூடப்பட்டு, பின்னர் இயங்கத் தொடங்கியதாக ரஷ்ய அரசாங்கச் செய்தி நிறுவனமான 'டாஸ்' தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்து உக்ரைன் இதுவரை அதிகாரபூர்வமாகக் கருத்துத் தெரிவிக்கவில்லை.

முன்னதாக, ஈரானில் தயாரிக்கப்பட்ட 75 ஷஹீத் ட்ரோன்களை உக்ரைன் மீது ஏவி ரஷ்யா சனிக்கிழமை தாக்குதல் நடத்தியது. அவற்றில் 74 ட்ரோன்கள் உக்ரைன் பாதுகாப்பு ஏவுகணைகளால் இடைமறித்து அழிக்கப்பட்டன. இந்தத் தாக்குதலின் முக்கிய இலக்காக கீவ் நகரம் இருந்ததாக உக்ரைன் தெரிவித்திருந்தது. (04)

# பாகிஸ்தான் அதிபர் பதவி விலக உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல்



பாகிஸ்தான் அதிபர் ஆரிஃப் அல்வியை பதவியிலிருந்து நீக்கக் கோரி அந்நாட்டின் உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குலாம் முர்டசா கான் என்பவர் சனிக்கிழமை தாக்கல் செய்த இந்த மனுவில், நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை அதிபர் மீறியுள்ளார். முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் கட்சிக்கு ஆதரவு அளிப்பதற்காக அதிபர் தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியுள்ளார். எனவே, அல்வியை அதிபர் பதவியிலிருந்து நீக்க வேண்டும், எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதிபர் ஆரிஃப் அல்வியின் பதவிக் காலம் கடந்த செப்டம்பர் 8 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. எனினும், பாகிஸ்தான் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட அவைகள் செயல்படாததால் நாட்டின் அரசமைப்புச் சட்டத்தின்படி அவர் அதிபர் பதவியில் நீடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# உத்தராகண்ட் சுரங்கத்தில் சிக்கியோதை மீட்கும் பணி 31 மீற்றர் அளவுக்கு செங்குத்து துளையிடுதல் நிறைவு



இந்தியாவின் உத்தராகண்ட் சுரங்கப் பாதையில் சிக்கியுள்ள 41 தொழிலாளர்களை மீட்கும் பணியில் இதுவரை 31 மீற்றருக்குச் செங்குத்தாகத் துளையிடல் பணி நிறைவடைந்துள்ளதாக மீட்புக் குழு தெரிவித்துள்ளது. இன்று 16 ஆவது நாளாக மீட்புப் பணிகள் நடைபெறுகின்றன.

இந்தியாவின் உத்தராகண்டில் சில்க்யாரா - பர்கோட் இடையே அமைக்கப்படும் சுரங்கப் பாதையில் கடந்த 12 ஆம் திகதி மண் சரிவு ஏற்பட்டது. இதில், 41 தொழிலாளர்கள் சுரங்கப் பாதைக்குள் சிக்கிக்கொண்டனர். அவர்களை மீட்பதற்காக, அமெரிக்கத் தயாரிப்பான ஆகர் இயந்திரம் மூலம் பக்கவாட்டில் துளையிடப்பட்டது. ஆனால், அந்த இயந்திரத்தின் தகடு, கம்பிகளில் சிக்கி உடைந்து சுரங்கப் பாதையில் சிக்கிக் கொண்டது. இதனால், அந்த இயந்திரத்தை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து, பக்கவாட்டில் துளையிடும் முயற்சி கைவிடப்பட்டது.

அதற்குப் பதிலாக, சுரங்கத்தின் மேல் பகுதியில் இருந்து செங்குத்தாகத் துளையிட்டு, தொழிலாளர்களை மீட்கத் திட்டமிடப்பட்டது. செங்குத்தாக துளையிடும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

மொத்தம் 100 மணி நேரத்தில் 81 மீற்றர் செங்குத்தாக துளையிட்டு தொழிலாளர்களை மீட்பதே திட்டம். இந்நிலையில் இதில் இதுவரை 31 மீற்றர் செங்குத்து துளையிடப்பட்டுள்ளதாக மீட்புக் குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இன்றும் நாளையும் பனி, மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளதால் மீட்புப் பணிகளில் சுணக்கம் ஏற்படும் அச்சம் நிலவுகிறது. (04)

# இந்தியா, சீனாவிலிருந்து விசா இல்லாமல் மலேசியாவுக்கு பயணிக்கலாம் என தகவல்

டிசம்பர் முதலாம் திகதி முதல் இந்தியா மற்றும் சீனாவைச் சேர்ந்தவர்கள் விசா இல்லாமல் மலேசியாவுக்கு பயணிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவிற்குச் செல்லும் சுற்றுப்பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக இந்தப் புதிய நடைமுறையை அறிமுகம் செய்வதாக மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தகவல் வழங்கியபோது, சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு, சீனா மற்றும் இந்தியாவைச் சேர்ந்தவர்களும் இனி விசா இன்றி மலேசியாவுக்குள் நுழையலாம்.

இந்தியா, சீனாவைச் சேர்ந்தவர்கள் மலேசியாவில் விசா இன்றி 30 நாள்கள் வரை தங்கலாம். புதிய நடைமுறை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நடமுறைக்கு கொண்டுவரப்படும்.

விசா தேவையில்லை என்றாலும் பயணிகள் குற்றப் பின்னணி அல்லது வன்முறையில் ஈடுபட்டிருக்கின்றனரா? என்பதை அறியப் பாதுகாப்புச் சோதனைகள் நடத்தப்படும்.

இந்தியாவை விட சீனாவிலிருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுப்பயணிகள் மலேசியாவிற்கு வர அதிக வாய்ப்புள்ளது, எனக் குறிப்பிட்டார். (04)

# அடிப்படை மனித உரிமை மீறல் கற்கைநெறி பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ் வழங்கல்



கிளிநொச்சி மாவட்டத்தின் பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்ட அடிப்படை மனித உரிமைச் சட்டக் கற்க நெறியை பூர்த்தி செய்தோர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது

இந்நிகழ்வு கிளிநொச்சிமாவட்ட பெண்கள் வாழ்வுரி மைச் சங்கத்தின் இணைப்பாளர் வள்ளிபுரம் வாசுகி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முதல் கட்டமாக 100 பேருக்குச் சான்றி தழ்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு, கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (02)

## 24 மணித்தியாலத்துக்குள் துவிச்சக்கரவண்டியில் நீர்கொழும்பிலிருந்து யாழ் பயணித்த முதியவர்



24 மணித்தியாலத்துக்கும் குறைந்த காலப்பகுதி யில், துவிச்சக்கரவண்டியில் நீர்கொழும்பு - கொச்சிக் கடையிலிருந்து யாழ்ப்பாணம் வரை பயணித்து முதி யவரொருவர் சாதனை படைத்தார்.

ரிச்சட் பெர்ணான்டோ என்ற 67 வயதுடைய முதி யவர் ஒருவரே குறித்த சாதனை பயணத்தை முன் னெடுத்தார்.

நேற்று முன்தினம் மதியம் 12 மணியளவில் அவர் தமது பயணத்தை ஆரம்பித்து நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணத்தை அடைந்தார்.

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் அவர், தமது பயணத்தை நிறைவு செய்திருந்தார். (01)

## இளைஞர் சமுதாயத்தில் எயிட்ஸ் தொற்று அதிகரித்துள்ளது 15 முதல் 24 வயதுக்குட்பட்டோரே அதிகம் எனவும் தெரிவிப்பு

இளைஞர் சமுதாயத்தின் மத்தியில் மீண்டும் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பால்வினை நோய்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் திலானி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, 2022 இல் எச்.ஐ.வி யில் பாதிக்கப் பட்ட 607 பேரில் 73 பேர் இளைஞர் சமூகத்தைச் சேர்ந்த வர்கள் எனவும், குறிப்பாக இதில் 15 முதல் 24 வய துக்குட்பட்டோரே அதிகம் அடங்குகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

டிசம்பர் முதலாம் திகதி உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு கொழும்பு சுகாதார மேம்பாட்டுப் பணியகத் தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போ- தே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ”2018 ஆம் ஆண்டு தொடக்கம், 15 முதல் 24 வயது வரையிலான இளைஞர் சமூகத்தில் எச்.ஐ.வி. பாதிக்கப்பட்டவர்க ளின் எண்ணிக் கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுகிறது.

மேலும், 2022 இல் புதிதாக இனங்காணப்பட்ட எச்.ஐ.வி யினால் பாதிக்கப்பட்டவர்களில் 73 பேர் இளைஞர்கள் ஆவர். அதாவது, இது 12 சதவீதம் ஆகும். அவர்களில் 66 பேர் ஆண்கள். எனவே, இளைஞர்களிடையே எச்.ஐ.வி. தடுப்பு மிகவும் முக்கி யமானது. நம்பகமான துணையுடன் உறவு கொள் ளுங்கள். பிற தொடர்புகள் இருந்தால் பாலியல் பாதுகாப்பு தடுப்பு முறைகளை கைக்கொள்வது மிக முக்கியம்” என்றார். (ரெந-45)

## 50 எழுத்து ஆளுமைகள் நூல் வெளியீடு



(எம்.எப்.நவாஸ்)

பாவேந்தல் பாலமுனை பாரூக் எழுதிய 50 எழுத்து ஆளுமைகள் நூல் வெளியீடு கடந்த 25 ஆம் திகதி சனிக்கிழமை அட்டாளைச்சேனை பிரதேசக் கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர் தலைமை இடம்பெற்றது.

இந்நூலில் 50 இலக்கிய ஆளுமைகளான கவி ஞர்கள், எழுத்தாளர்கள் போன்ற துறை சார்ந்தவர்கள் பற்றித் தொகுக்கப்பட்டுள்ளது.

நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதிகளாக கிழக்கு மாகாணப் பண்பாட்டுத் திணைக்களப் பணிப் பாளர் எஸ்.நவநீதன், தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் ரமிஸ் அப்துல்லா ஆகியோரும் அதிதி களாக சம்மாந்துறைப் பிரதேச செயலாளர் எஸ்.எல். எம்.ஹனிபா, கல்முனைப் பிரதேச செயலாளர் டீ.அதி சயராஜ் மற்றும் எழுத்தாளர்கள், கவிஞர்கள், பல்துறை சார்ந்தவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நூலாசிரியருக்கு பொது அமைப்புக் களினால் பொன்னாடைகள் போர்த்தி கௌரவிக்கப் பட்டதோடு, நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

## நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கார்த்திகை உற்சவம் நேற்று



யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் திருக்கார்த்திகை உற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (26) மாலை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

கார்த்திகை மாத, கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடிய குமராலய தீபத் திருநாளான நேற்று மாலை வசந்த மண்டபப் பூசை நடைபெற்று, வள்ளி, தெய்வானை சமேதராக கைலாச வாகனத்தில் முத்துக்குமார சுவாமி எழுந்தருளியிருக்க, ஆலய முன்றலில் அமைக்கப் பட்டிருந்த சொக்கப்பனை எரிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நல்லூர் முருகப் பெருமானின் வெளிவீதியுலாவும் சிறப்பாக நடைபெற்றது.



# FARM TO GATE என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்த வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பணிப்பு



வடக்கு மாகாணத்திலுள்ள விவசாயிகள் மற்றும் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வோர், உற்பத்திகளுக்கான நியாயமான விலையை பெற்றுக் கொள்ளும் நோக்கில் FARM TO GATE என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் பணிப்புரைக்கு அமைய இந்தச் செயலிக்கான மென்பொருள் வடிவமைப்பு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு தை மாதம் குறித்த செயலியை அங்குரார்ப்பணம் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் செயலியின் ஊடாக விவசாயிகளிடமிருந்து, நுகர்வோர் நேரடியாக தங்களுக்கு தேவையான உற்பத்திகளை மொத்தமாகவோ அல்லது சில்லறை விலையிலோ கொள்வனவு செய்ய முடியும். இதனூடாக விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் மரக்கறிகள், பழங்கள் மற்றும் ஏனைய உற்பத்தி பொருட்களை காலவதியாகும் முன்னர் விற்பனை செய்துக்கொள்ள முடிவதுடன், நுகர்வோரும் தரமான, புதிய உற்பத்திகளை நேரடியாக பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளையும் இது ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது.

குறித்த செயலியில் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் தரவுகள் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், உற்பத்தி பொருட்களை இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய இடம், உற்பத்திகளின் தரம், கையிருப்பிலுள்ள அளவு, விலை உள்ளிட்ட அனைத்து விடயங்களும் தரவேற்றம் செய்யப்பட்டிருக்கும். இந்த விடயங்கள் அனைத்தையும் துறைசார் திணைக்களங்களின் கிராமிய மட்ட அலுவலர்கள் மேற்பார்வை செய்ய உள்ளதோடு, விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தவும் உள்ளனர்.

தற்போது உரிய சந்தைவாய்ப்பு இன்மையால் உற்பத்தியாளர்கள் பாரிய அளவில் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். இந்த சிக்கலுக்கான தீர்வை வழங்கும் நோக்குடனேயே வடக்கு மாகாணத்தின் ஆளுநரால் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சு, கூட்டுறவு, கிராமிய அபிவிருத்தி, தொழிற்துறை, கால்நடை, உள்ளுராட்சி திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் இந்த புதிய முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (O1)

# இலங்கை கிரிக்கெட் இடைக்காலக் குழு வழக்கு பரிசீலனை மீண்டும் ஒத்திவைப்பு

மேன்முறையீட்டு நீதிமன்றம் இலங்கை கிரிக்கெட் இடைக்காலக் குழு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மேலதிக பரிசீலனையை மீண்டும் ஒத்திவைத்தது.

அதன்படி, இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நாளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளதுடன் தொடர்ந்து ஐந்தாவது முறையாக இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வாவினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு, நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் டி.என். சமரகோன் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இன்று காலை விசாரணைக்கு வந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்னவினால் இந்த நீதிபதிகள் குழாம் பெயரிடப்பட்டது.

இதற்கு முன்னர் நீதியரசர் நீல் இத்தவெல மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் உட்பட மூன்று நீதிபதிகள் மனுவை பரிசீலிப்பதில் இருந்து விலகிக் கொண்டுள்ளனர்.

கடந்த நவம்பர் 6 ஆம் திகதி அன்று, உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தலைமையில் விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் ஏழு பேர் கொண்ட இடைக்காலக் குழு நியமிக்கப்பட்டது.

மறுநாள், மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலக் குழுவுக்கு 14 நாள் தடை உத்தரவு பிறப்பித்தது.

விளையாட்டு அமைச்சரின் இந்த நடவடிக்கையை சவாலுக்கு உட்படுத்தி இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் தாக்கல் செய்த ரிட் மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் விக்கும் களுஆராச்சி ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

பின்னர், நவம்பர் 13 அன்று, தடை உத்தரவை நீக்கக் கோரி அமைச்சர் ரணசிங்க ஒரு பிரேரணையை தாக்கல் செய்திருந்தார். (த)

# இந்த வருடத்தில் மாத்திரம் பதுக்கல் பேர்வழிகளிடமிருந்து அபராதமாக 24 கோடி ரூபா நுகர்வோர் அதிகாரசபை வசூல்!

இந்த வருடத்தின் கடந்த பத்தரை மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் 24 கோடி ரூபாவை அபராதமாக வசூலிக்க முடிந்ததாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த காலப்பகுதியில் 22,000 திடீர் சுற்றி வளைப்பு சோதனைகள் நடத் தப்பட்டுள்ளதாகவும், அதில் 3151 மற்றும் 510 கரும்பு தொடர்பான சுற்றி வளைப்பு சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். அவ்வாறே, சீனி பதுக்கி வைக்கப்பட்டுள்ள இடங்களைத் தேடி இன்னும் பல சோதனை நடத்தப்படும் என் றும் அவர் குறிப்பிட்டார். மேலும், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் கொள்வனவு செய்யும் பொருட்கள் மற்றும் உணவு வகைகளின் தரம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்கில் அனைத்து மாவட்டங்களிலும் சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும் எனவும், இது தொடர்பாக நுகர்வோர் தமது புகார்களை 1977 தொலைபேசி என்ற எண்ணில் குறிப்பிடலாம் எனவும் அவர் கூறினார். (ரெந-46)






## 34 வருட கால ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு



(கற்பிட்டி - எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பழைய மாணவ-னும் ஆசிரியர், பிரதி அதிபர், உதவி அதிபர், மற்றும் பதில் அதிபராகவும் கடந்த 34 வருட காலமாக அயராது பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் முன்னேற்றத்தி-ற்காகவும் இன்று வரை சேவை செய்த கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் எஸ்.எச் /ஹைசைன்-தீன் (பாசர்) ஆசிரியர் இன்று தனது ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

## புத்தளம் பிரன்ட்ஸ் நிறுவனத்தின் 5 வருட வேலைத்திட்ட நிறைவு விழா

(கற்பிட்டி - எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் பிரன்ட்ஸ் நிறுவனம் கடந்த 2019 முதல் 2023 வரையான ஐந்து வருடங்களாக புத்தளம் மாவட்டத்தின் புத்தளம் மற்றும் வண்ணாத்திவில்லு ஆகிய பிரதேச செயலகங்களில் உள்ள 22 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 25 சிறுவர் சங்கங்களின் ஊடாக தமது வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதில் புத்தளம் பிரதேச செயலகத்தின் 10 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள 14 சிறுவர் சங்கங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களின் ஐந்து வருட நிறைவு விழா எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை புத்தளம் மாவட்ட செயலக பிரதான கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2 மணிக்கு புத்தளம் பிரன்ட்ஸ் நிறுவனத்தின் குழுத் தலைவி எம்.எப்.எப்.சுபியானி மற்றும் நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் ஐ. அஸ்ரிக் ஆகியோரின் இணைத் தலைமையில் நடை-பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட அதிபர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத்தும் அதிதிகளாக புத்தளம் மாவட்ட உதவி அதிபர் கங்கானி கருநாரத்ன, புத்தளம் பிரதேச செயலாளர் எஸ்.பி. வீரசேகர, ப்ரன்ஸ் நிறுவனத் தலைவர் கே.ஏ. பந்துல விஜேசிங்க, புத்தளம் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் வை.என்.டி.கருணாதாச மற்றும் புத்தளம் நகர சபையின் செயலாளர் எல்.பீ.ஜி.பிரீத்தீகாஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் சிறுவர் சங்கங்களின் சிறார்களே இன்றைய கதாநாயகர்கள் - என்ற அடிப்படையில் சிறுவர் சங்கங்களுக்கிடையில் இடம்பெற்ற கலைநிகழ்சியில் வெற்றி பெற்று முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்ற சிறுவர் சங்க சிறார்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், கடந்த ஐந்து வருடங்களாக சிறுவர் சங்கங்களை வழிநடாத்திய தொண்டர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.11.2023இல் வெளியிடப்பெற்றது.